Immigration Advice Authority





# குடிவரவு ஆலோசனையை நாடுகின்றீர்களா? IAA என்பது உங்களுக்கு உதவ இங்கே.

குடிவரவு ஆலோசனை அல்லது சேவைகளை வழங்கும் எவரும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். **குடிவரவு ஆலோசனை ஆணையம்** (IAA) குடிவரவு ஆலோசகர்களுக்கான தரநிலைகளை அமைத்துள்ளது, மற்றும் அது பற்றிய புகார்களை விசாரிக்கலாம் தவறு நடந்தால் உங்கள் சார்பாகவும்.

நீங்கள் நம்பக்கூடிய தொழில்சார் குடிவரவு ஆலோசனையைப் பெறுகின்றீர்கள் என்பதை உறுதிப்படுத்த, உங்கள் ஆலோசகர் IAA இல் பதிவு செய்யப்பட்டுள்ளவரா என்பதை எப்போதும் சரிபார்க்கவும் அல்லது எங்கள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆலோசகரைத் தேடவும்.

## IAA-பதிவு செய்யப்பட்ட ஆலோசகரைக் கண்டறியவும்

gov.uk/iaa ஐப் பார்வையிடுதன் மூலம் பதிவுசெய்யப்பட்ட குடிவரவு ஆமலொகவர நீங்கள் கண்டறிய முடியும்.

## குடிவரவு ஆலோசனை ஆணையம் என்பது யார் (IAA)?

IAA என்பது குடிவரவு ஆலோசகர்களை ஒழுங்குபடுத்துடன் குடிவரவு ஆலோசனைத் துறையில் சிறந்த நடைமுறையை ஊக்குவிக்கும் அமைப்பாகும். எங்களிடம் பதிவு செய்ய, ஓர் ஆலோசகர் எங்கள் தரநிலைக் குறியீட்டைப் பூர்த்தி செய்து, தொடர்ந்து அதனைப் பேணக்கூடியவர் என்பதை நிரூபிக்க வேண்டும் அந்த தரநிலைகள்.

இங்கிலாந்தில் சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்படாமல் குடிவரவு ஆலோசனை வழங்குவது சட்ட விரோதமானது. அவ்வாறு செய்பவர்கள் பாதிக்கப்படக்கூடிய மக்களை ஆபத்தில் ஆழ்த்துவதோடு குடிவரவு அமைப்பையும் சேதப்படுத்துகின்றார்கள். சட்டத்தை மீறும் ஆலோசகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க IAA க்கு அதிகாரம் உள்ளது.



## ஓர் ஆலோசகர் மீதான முறையீடு

உங்களுக்கு மோசமான அனுபவம் இருந்தால், அதைப் பற்றி நாங்கள் செவிமடுக்க விரும்புகின்றோம், அதன் மூலம் விஷயங்களைச் சரி செய்ய நாங்கள் உதவி செய்வோம். IAA-விடம் நீங்கள் முறையீடு செய்யலாம்:

- IAA இல் பதிவு செய்யப்பட்ட ஆலோசகரிடமிருந்து நீங்கள் பெற்ற மோசமான சேவை, தவறாக வழிநடத்தப்படுவது, அதிக கட்டணம் வசூலிக்கப்படுவது, மோசமான வாடிக்கையாளர் சேவை, மோசமான ஆலோசனை அல்லது உங்களுக்கு பதிலளிக்கத் தவறியது போன்றவை பற்றி
- ஒழுங்குபடுத்தப்படாத நபரிடமிருந்து நீங்கள் பெற்ற குடிவரவு பற்றிய ஆலோசனை

உங்கள் சார்பாக ஒருவரை முறையீடு செய்யுமாறு நீங்கள் கேட்கலாம், உதாரணமாக ஒரு நண்பர், வழக்கறிஞர் அல்லது தன்னார்வ அமைப்பு.

எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிட இங்கே ஸ்கேன் செய்யவும்

## எங்களை எப்படி தொடர்பு கொள்வது

முறையீடு செய்ய, அல்லது ஒரு பொதுவான கவலையை எழுப்ப IAA ஐ தொடர்பு கொள்ள பல வழிகள் உள்ளன:

- gov.uk/iaa -க்குச் செல்லவும்
- மின்னஞ்சல் info@immigrationadviceauthority.gov.uk